பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 03 2026 WEDNESDAY 12 40 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்கு ஆசிய நிலவரம் தொடர்பாக விவாதிக்க புதுதில்லியில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
2. ஈரானின் சண்டை நிறுத்தம் மற்றும் அணு ஆயுத திட்டத்தை கைவிடுவதற்கு அமெரிக்கா 15 அம்ச திட்டத்தை அறிவித்துள்ளது.
3. ரயில் டிக்கெட் முன்பதிவு முறைகேடுகளை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
4. தேர்தல் பணிகளில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பும் முக்கியமானது என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.
5. பார்வையற்றோருக்கான உலகக்கோப்பை ஜூடோ போட்டியில் இந்தியாவின் கோகிலா வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

மேற்கு ஆசிய நிலவரம் தொடர்பாக விவாதிக்க புதுதில்லியில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நடைபெற்று வரும் மோதலால் உலக அளவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து விவாதிக்க இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று மாநிலங்களவையிலும், நேற்று முன்தினம் மக்களவையிலும் உரை நிகழ்த்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் ஏற்கனவே ஆலோசனைக் கூட்டங்களும் நடைபெற்றன.

இந்நிலையில் அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளையும் பெறும் வகையில் இன்று இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஈரானின் சண்டை நிறுத்தம் மற்றும் அணு ஆயுத திட்டத்தை கைவிடுவதற்கு அமெரிக்கா 15 அம்ச திட்டத்தை அறிவித்துள்ளது.

இதனை வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் டோனல்ட் டிரம்ப், இதுகுறித்து பேசுவதற்கும் டெகரான் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்தர் மூலம் அமெரிக்காவின் 15 அம்ச சண்டை நிறுத்த கோரிக்கை ஈரானுக்கு வழங்கப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையேயான பகைமையை முடிவுக்கு கொண்டு வரவும் ஈரானின் அணுசக்தி திட்டங்களை கைவிடுவதற்கும் விரிவான கோரிக்கைகள் இதில் இடம்பெற்றிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

ஈரானில் உள்ள மூன்று முக்கிய அணுசக்தி திட்டங்களை கலைக்க வேண்டும் என்றும் யுரேனிய கனிம திட்டங்களை நிறுத்திவைக்க வேண்டும் என்றும், கண்டம் விட்டு கண்டம் பாயும் நீண்ட தூர ஏவுகணை திட்டத்தையும் கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

Hormuz நீரிணையை முழு அளவில் போக்குவரத்துக்கு திறந்து விடும் வகையில் ஈரான் முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு மாத காலம் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்படும் என்றும் அந்த காலகட்டத்தில் அணு ஆயுத திட்டங்களை முற்றிலுமாக முடிவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஈரானிடம் உள்ள அணுசக்தி வளங்கள் அனைத்தையும் குறிப்பிட்ட கால அடிப்படையில் சர்வதேச அணுசக்தி முகமையிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரானின் ராணுவ கட்டமைப்பு தங்கள் நாட்டை பாதுகாக்க மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த கோரிக்கைகளுக்கு ஒத்துக்கொள்ளும் நிலையில் அந்த நாட்டின் அணுசக்தி தடைகள் படிப்படியாக நீக்கப்படும் என்றும் அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கோவிட் பெருந்தொற்றுக்கு பிறகு ஆயிரத்து 24 புதிய ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அமைச்சர், தற்போது இயக்கப்பட்டு வரும் ரயில்களில் 4 ஆயிரத்து 51 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஏழை- எளிய மற்றும் மத்திய வருவாய் பிரிவு மக்களுக்கு ஏற்ற வகையில் குறைந்த கட்டணத்தில் தரமான போக்குவரத்து சேவையை ரயில்வே துறை வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

ரயில்களில் உள்ள 78 சதவீத இடங்கள் பொது மற்றும் தூங்கும் வசதி கொண்ட இருக்கைகளாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இணைய தளம் மூலம் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்வதில் சிலர் முறைகேடுகளில் ஈடுபடுவதாக தெரிவித்தவர், இதனை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

டிக்கெட் பதிவு செய்வதற்கான செயலிகளில் 3 கோடிக்கும் மேற்பட்டவை போலியானது என கண்டறியப்பட்டு உடனடியாக அவற்றை ரயில்வே நிர்வாகம் செயலிழக்க செய்துள்ளதாகவும் கூறினார்.

பாதுகாப்பான ரயில் பயணத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்வர், ரயில் விபத்துகள் 90 சதவீதம் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ரயில்வே பாதுகாப்புக்கா ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

தேர்தலில் நூறு சதவீத வாக்குப்பதிவை உறுதிசெய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் பத்திரிகை தகவல் அலுவலகம் தயாரித்த தேர்தல் குறித்த கையேட்டை வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை போன்ற நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு நடடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக கூறினார்.

ஊடகவியலாளர்களும் இதற்கு பங்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் செய்திகள் நம்பிக்கைக்குரியதாக இருப்பதாகவும் அதற்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் கூறினார்.

சமூக வலைதளங்களும் தேர்தல் ஆணையத்ததால் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், தேர்தல் நடத்தை நெறிமுறறைகளை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பான புகார்களை அதற்கான கை பேசி செயலியில் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

உரிய முறையில் அளிக்கப்படும் புகார்கள் மீது உடனுகக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

>>>>><<<<<

தேர்தல் பணிகளில் ஊடகத்தினர் ஊடகவியலாளர்களும் முக்கிய பங்கு வகிப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு பத்திரிகை தகவல் அலுவலகம் தயாரித்த தேர்தல் கையேட்டினை வெளியிட்டு அவர் பேசினார்.

இதுவரை நடைபெற்ற தேர்தல்கள் குறித்த அனைத்து புள்ளி விவரங்களும், இந்த புத்தகத்தில் இடம் பெற்றிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த புத்தகத்தை வெளியிட்ட பத்திரிகை தகவல் அலுவலகத்தின் குழுவினருக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதாகவும் திருமதி அர்சசன பட்நாயக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆகாஷவாணி, தூர்தர்ஷனின் பகுதி நேர செய்தியாளர்களுக்கான தேர்தல் குறித்த பயிலரங்கையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குனர் திரு. வை பழனிச்சாமி பேசுகையில், பண்டைய குடவோலை முறை தொடங்கி தற்போது வரையிலான தேர்தல் குறித்த அனைத்து வரலாற்று தகவல்களையும் உளளடக்கியதாக இந்த புத்தகம் கொண்டு வரப்பட்டு இருப்பதகாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ள இந்த சூழலில் சமுக வலை தளங்களில் பரப்பப்படும் பொய் செய்திகளை தவிர்த்து அதன்

உண்மைத்தன்மையை உறுதி செய்த பின்னரே ஊடகங்கள் வெளியிட வேண்டும் எனறு அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் அம்ரிஸ்டர் ஸ்ரீ மாதா வைஷ்ணவோ தேவி- கத்ரா இடையே இயக்கப்பட்டு வரும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் குர்தாஸ்பூர்- பட்டாலா வழியாக இயக்கப்படும் என்று வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த ரயில் ஜம்மு, பதான்கோட், கண்டோன்மெண்ட், குர்தாஸ்பூர், பட்டாலா ஆகிய இடங்களில் நின்று செயல்லும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வழித்தடத்தில் பயண நேரம் குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பயணிகள் மற்றும் ஆன்மிக யாத்ரிகர்களுக்கு பெரிதும் பயன்படும் என்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னர் இந்த ரயில் ஜலந்தர் வழியாக இயக்கப்பட்டு வந்தது.

>>>>><<<<<

மேற்கு வங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சரிபார்ப்பு பணியின் அடிப்படையில் வாக்காளர்களின் கோரிக்கைகளை அடுத்த மாதம் ஆறாம் தேதிக்குள் பரிசீலனை செய்து முடிக்குமாறு உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்து வரும் தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த், நீதிபதி ஜாய் மல்யா பக்ஷி ஆகியோர் கொண்ட அமர்வு வாக்குப்பதிவு நடைபெறும் முன் அனைத்து பணிகளையும் முடிக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்படும் திருத்தப்பணிகள் தொடர்பான அறிக்கையை ஒவ்வொரு நாளும் உச்சநீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை அணுகலாம் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் திரிகுட்டா மலையில் அமைந்துள்ள ஸ்ரீ வைஷ்ணவோ தேவி குகைக்கோவிலில் சைத்ர நவராத்திரி பண்டிகை நடைபெறுவதையொட்டி பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வந்தவண்ணம் உள்ளனர்.

இதுவரை 2 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் நவராத்திரி பண்டிகை தரிசனத்தை முடித்துள்ளனர்.

கோவிலுக்கு வரும் பக்தர்களை பாதுகாப்பாக அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாத்திரை செல்லும் பாதையில் மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கூட்ட நெரிசலை தவிர்த்து பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள ஏதுவாக யாத்ரிகர்கள் முன்பதிவு செய்து பயணத்தை தொடருமாறு ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

யாத்திரையின் போது வழிகாட்டும் நெறிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பார்வையற்றோருக்கான உலகக்கோப்பை ஜூடோ போட்டியில் இந்தியாவின் கோகிலா வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 52 கிலோ எடைப்பிரிவில் துருக்கியின் Cahide eke-வை வீழ்த்தி அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

லண்டனில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Ramit Tandon காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் தகுதி சுற்று ஆட்டத்தில் அவர் கொலம்பியாவின் Miguel Rodrics-ஐ 11-5, 11-9 4-11, 11-7 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

>>>>>END<<<<<